Kalmunai

உ

சர்வம் சிவமயம் யகத்!



# அர்ச்சனா

இந்து சமய கலாசார பண்பாட்டு மேம்பாட்டிதழ்
அர்ச்சனா பப்ளிகேஷன் சார்பில் தொகுத்து வெளியிடுபவர்

**சிவஸ்ரீ. க.ஜ. யோகராசா குருக்கள்**

0777519 7211



பாண்டிருப்பு ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வருடாந்த

## தீப்பள்ளைய உற்சவ சிறப்பிதழ் – 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துதி செய்வோம் பிள்ளையாரப்பா



மாணிக்கப்பிள்ளையாரே - இந்த
மானிலத்தின் தலைமகனே
காணிக்கை உன்னடிக்கே - என்
கருத்தினில் குடியிருப்பாய்

மூசிக வாகனனே - ஆதி
மூலமாய் இருப்பவனே
ஆசிகள் தந்தருள்வாய் - எங்கள்
அம்பிகையின் பாலகனே

வித்தைக்கு அதிபதியே - வரும்
விக்கினங்கள் தீர்ப்பவனே
சத்தியத்தின் காவலனே - சகல
சௌபாக்கியம் தருபவனே

முருகனுக்கு மூத்தவனே - என்றும்
மூவுலகும் காப்பவனே
கருணையின் திருவுருவே - எமைக்
காத்திடும் கணபதியே

பரமசிவன் திருமகனே - அந்த
பரந்தாமன் மருமகனே
கரம் கூப்பி வணங்குகிறோம் - என்றும்
கருணை செய் கஜமுகனே.

காவிரியை ஓடவைத்த மகா
காவியத்தின் நாயகனே
பூவிரியும் சோலையென - அருள்
பூத்திடும் கண நாதனே

அரச மரத்தடியினிலே - அமர்ந்து
அருளாட்சி புரிபவனே
சிரம் தாழ்த்திச் செல்வோரை - காக்கும்
சித்தி விநாயகனே

வேண்டியவர் குறைதீர்க்கும் - அழகு
வேழ முகம் உடையவனே
பாண்டிருப்பில் குடி கொண்டு - அருள்
பாலிக்கும் ஐங்கரனே.

பாண்டிருப்பு - கு. சுந்தரலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சர்வம் சிவமயம் யகத்!

# அர்ச்சனா

*''நன்மைகள் விளைய நன்மைகள் செய்வோம்*
*நமக்கென உளதை பிறர்க்கும் கொடுப்போம்.''*

*மேன்மை மிகு விசுவாசிகளே!*

*எங்கள் குலதெய்வமான ஸ்ரீ திரௌபதி அம்பாளின் உற்சவகாலச் சிறப்புகளையும், அவற்றில் தெரியாத உண்மை விளக்கங்களையும், வரலாற்று பட்டய உண்மைகளையும், இளம் சந்ததியினர் அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக 1989ம் ஆண்டு, 'இந்துமதி' என்ற பெயரிலும், 1999ம் ஆண்டு 'அர்ச்சனா' என்ற பெயரிலும் வெளியிட்டு, உங்கள் அன்பைப் பெற்ற நான், பல்கலைக்கழக மாணவர்களின் தேவைகருதியும், எம் சமய மேன்மை கருதியும், யாவருக்கும் பயன்பட்டு இறையருள் கிட்டி அன்னை ஸ்ரீ திரௌபதியின் அருளால் மேன்மை பெற்று வாழ இதை உங்களுக்கு சமர்ப்பிக்கிறேன்.*

*நல்லாசியுடன்*

சிவஸ்ரீ க.ஐ. யோகராஜா ஐயர்

'' எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்
அப்பொருள் மெய் பொருள் காண்பது அறிவு''
*- திருக்குறள் -*

அர்ச்சனா
வீமர் வீதி
பாண்டிருப்பு-02
கல்முனை
தொலைபேசி : 0672222442



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்சத்தைக் குறிக்கும், முக்தியை உணர்த்தும், மோனத்தைக் காட்டும், பூசை முறைகள்.

எந்தச் சைவ ஆலயங்களிலுமில்லாத பூசை முறை ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்திலே பக்தியோடு நடை பெறுகின்றன. சைவம், வைஷ்ணவம், சாக்தம் என்ற திரிகரண முறையில் காரியங்கள் நடைபெறுகின்றன.

சைவ முறையின் தியான அனுட்டானங்களுடன் விபூதி பூசப்படுகின்றது. வைஷ்ணவ முறையில் குங்குமத்தால் நாமக் கோடு இடப்படுகின்றன. சாக்தம் என்ற சக்தி வழிபாட்டு முறையில் வாசனைத் திரவியங்களால் தயரிக்கப்படும் 'பண்டாரம்' எனும் மஞ்சள் பொட்டு வைக்கப்படுகின்றது.

சிவன், விஷ்னு, சக்தி, என்ற மகாதெய்வங்களின் சிறப்புக்களுடன் தோன்றிய ஆலயத்தின் தொன்மை மிகவும் நீண்டது. இந்து மதத்திலுள்ள அதி உயர் சக்தி மிக்க தெய்வங்களின் சிறப்பு மிக்க கீர்த்தி மிகு, இல்லமே ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமாகும்.

## மனிதர்களை வணங்கும் மனிதனைப் பூஜிக்கும் மகாசக்தி ஆலயம்.

ஆலயங்களில், தெய்வங்களைத் தவிர வேறு யாரையும் கை கூப்பித் தொழக் கூடாது. வீழ்ந்து வணங்கக் கூடாது. பணிந்து வணங்கக் கூடாது, பாதம் தொழக் கூடாது என்பது ஆகம நடைமுறை ஆனால், ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தில் பெருன்பான்மை கிரியைகள் மனிதர்களுக்கே நடைபெறுகின்றன.

பூசாரிமார் முதல், குருக்கள்மார் வரை செய்கின்ற காரியப் பூசைகள் பெரும்பாலும் பாண்டவர் வேடம் பூண்டு கட்டுக்கு நிற்கும், மனிதர்களைப் பூஜிக்கும் காரியமாக அமைகின்றன. இப் பூசைகள் எல்லா மக்கள் மனதிருப்தியுடன் சிறப்பாக நடைபெறுகின்றன.

## பண்டார பொட்டு, பகட்டாக இட்டு, பண்பாட்டை காட்டு.

பண்டாரம் எனும் பெயர் கொண்ட மஞ்சள் நிறத்திலகம் இடுவது மகாசக்தி ஆலயமான ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தில் சிறப்பு

வாசனைத் திரவியங்களாலும், வைத்திய மூலிகைகளாலும் தயாரிக்கப்படும், மஞ்சள் வஸ்த்து வான பண்டாரம் எனும் இப் பொட்டு மக்களின் மேன்மைக்கு வழிகாட்டுகிறது. அம்மை நோய் தீர்க்கும் இவ்வஸ்து இடுபவர் மனங்களில் மகிழ்ச்சியும் தெய்வத்தைமையையும் ஏற்படுத்துகின்றது. லஷ்மி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடாட்சம் பொருந்திய பண்டாரம் இடுவதால் வறுமை, துன்பம், பேய் பிசாசு, பீடை என்பன அகலும் என்பது பண்டு தொட்டு வந்த உண்மையாகும்.

ஆண், பெண், இருபாலாரும், வயது வித்தியாசமின்றி விருப்போடு ஆலயத்தில் இட்டுக் கொள்வது பண்பாட்டுக் கோலமாகும். அது பரி பக்குவ நிலையுமாகும். மகாசக்தியின் அருட்பிரசாதமான இத்திலகம் கிழக்கில் எந்த இந்து ஆலத்திலும் இல்லாத தொன்றாகும்.

**மடி ஏந்திப் பிச்சை கேட்டு**
**மண்டியிட்டுச் சோறு வாங்கும்**
**மண் குலப் பெண்டீர், மகிமையோ அழகு,**

மாலை வேளைப் பூசை மிகவும் சிறப்பானது. பாண்டியூர் மக்கள் முதல் பக்கத்தூர் மக்கள் வரை மகிழ்வோடு கண்டு களிக்கும் பூசை, பூசையை அடுத்து கட்டுக்கு நிற்கின்ற கொலுவினர் அனைவரும் விரதம் முடித்து, ஒரு வேளை உணவை உவப்போடு சாப்பிடும் வேளை, ஐவராசாக்களிடம், பேய்கள் பூதங்கள், பறவைகள், மிருகங்கள், புளுக்கள் எல்லாம் முற்பிறப்பில் தேவகர்ந்தவர்களாக இருந்து சாபத்தால் இன்னிலை அடைந்தமையினால், சாப விமோசனம் பெறவும், முக்தி நிலையடையவும் மடிப்பிச்சை வாங்கி சாப்பிடல் என்ற கோட்பாட்டிலும், அல்லது காட்டில் வாழ்கின்றவற்றுக்கெல்லாம் பாண்டவர்கள் வனவாச காலத்தில் உணவளித்துச் சாப்பிட்டார்கள் என்ற தத்துவ அடிப்படையில் தோன்றிய நற்கருமம், இதனை பொதுமக்கள் நேர்த்தி வைத்து, அரிசி, காய்கறி அமுதுங்களித்து மடிப்பிச்சை கேட்டு மடியேந்தி பிச்சை வாங்கி உவப்போடு சுற்றம் சூழக் கொடுத்து உண்ணும் போது தேவாமிர்தமாக இருக்கும், (இச் செயல் பண்டவர்களாக இருக்கும் கொலுவினருக்கு மிகவும் பொறுமை பேணும் களமாகவும் இருக்கும் பகல் முளுவதும் விரமிருந்து பூசை காரியங்களில் ஏற்பட்ட களைப்பு வேறு, பாண்டவ நிலை, என்பது இங்கே கோடியிட்டுக் காட்டப்படுகின்றன)

**மாணிக்கப் பிள்ளையாரின் ஆலயத்தில்**
**மகா சக்தியின் மகிமை காணீர்**
**ஏழாம் நாளில் எடுப்பாய் ஓர் விழா**

ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயத்தில் கொடியேற்றம் செய்து ஏழாம் நாள் கண்ணன் அத்தினாபுரம் வரல் என்ற நிகழ்ச்சி ''சுவாமி எழுந்தருளல்'' என்ற பேரேடு எடுப்பாய் நிகழும். அத்தினாபுர எல்லை எனக் காட்டும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து பாண்டவர் வேடம் பூண்டவர்களால், பல்லக்கில் (தேரினில்) உபசாரங்களால் தூக்கி வருவதும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்றைய நிகழ்வில் ஓர் அம்சமாக திரௌபதி கண்ணனிடம், தன்னிலை எண்ணிக் கதறுவதாக அழைப்பதான ஓர் பேரின்பக்காட்சி நிகழும், திரௌபதியாக வேடம் பூண்ட விரதகார அன்பருக்கு மந்திர உச்சாடனங்கள் செய்து தெய்வமாட உருவேற்றித் தோத்திரங்கள் செய்து ஆடவைப்பர் உருவேற நேரமெடுக்கும், இக்காலமே துரியோதன் சபையில் துர்ச்சாதனன் துகில் உரிந்த நிலையில் அந்நிலையில் ஒரு கையால் தன்னைக் காத்துக் கொண்டுகதறிய திரௌபதி, இரண்டு கைகளையும் நீட்டி பூரணசரணாகதியடைந்ததும், கண்ணன் வந்ததாக உள்ள ஐதீகத்துக் கேட்ப நேரமெடுக்கும், அதன் பின்னரே திருவேறி உருவேறும், தெய்வமாடுவார் திருவாக்குக் கொடுப்பார்.

## எட்டாம் நாள் அதிகாலை ஒரு சுப நாள், எடுக்கும் ஒரு நாட்கால் வெட்டல், கட்டுக்கு நிற்போர் தீபாய அதுவே கரு.

உடம்பு சுயமாக இயங்குவதில்லை, ஆத்மா இந்த பூவுலகில் வாழும் போது மோட்சப் பேறுக்காக, உடம்புக்கு உதவுகின்றது. தானம் தவங்கள், விரதாதிகளினால் புனிதமடைந்து எப்போதோ வரப்போகும் மோட்சத்திற்காக, அது நற்காரியங்கள் செய்து, மோட்சத்திற்கு நன்மை சேர்பபது போல, எப்போதோ மூட்ட வேண்டிய தீக்கு இப்போது சுப நாள் கட்டை வெட்டப்படுகிறது.

## பந்தல் கால், அது கலியாணக்கால் பணிக்கனா குடியாரின் பண மிதப்பு, வந்து கூடும் அடியார்களின் சிறப்பு

பன்னிரண்டாம் நாளில் பந்தக்கால் வெட்டல் அழகு. ஆத்மாவின் உடம்புக்குச் சிறப்பு, சிருங்காரம் கண்டு தெளிவு, காண்பதைக் குறிக்கும், சுயம்வரம் அழகு. சிருங்காரம் வரும்போது ஐம்புலங்களும் அதன் அடக்கம் - ஐவருக்கும் பஞ்சாலி பத்தினியாய் அவணியில் பேரெடுப்பு.

## வேளாளர் குலத்தோர் கட்டும் கட்டுத் தோரணம் - அது விண்ணைமுட்ட வேதனைகள் இருப்பதைக் காட்டும்

பதின்நாலாம் நாள் செட்டி வேளாள குலத்தவர்களால் கட்டப்படும் தோரணம். அபிமன்யு மாண்ட புத்திர சோகத்தில் அருச்சுனன் தீ முட்டி இறக்க வென்று மூட்டுகின்ற தீயைக் காட்டுவது போல் இருக்கும். (தீச்சுவாலை வடிவில் தோரணம் கட்டுவது இப்போது இல்லை இது திருத்தப்படவேண்டும்) தோரணங் கண்டு தேத்தரசன் (அபிமன்யுவைக் கொன்றவன்) வெளிவர, அர்சுனன் தேத்ரசனைக் கொல்வதாக இருக்கும் தோரணப் பூசை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மருத்துவ குலத்தோர் செய்கின்ற சோடனை மாண்ட தேத்தரசன் தலை போல் தொங்கி நிற்கும் பாண்டவர் களிப்பைக் காட்டி சிரிக்கும்**

மருத்துவகுலத்தோர் (நாவிதர் குலத்தோர்) செய்கின்ற சோடனைகள் மனதிற்கு களிப்பூட்டும் அழகூட்டும் ஆலயத்திற்கு மெருகூட்டும், தலை தொங்கல் போல் கொத்துப் பூக்கட்டுகின்ற சோடனைகள் எந்த ஆலயத்திலும் இல்லை, இந்த மரபு மருத்துவ குலத்தோர் சிறப்பு.

**வனவசாத்தில் - ஒரு இலைவாசம் அது வதவாசம்.**

**பீமன் செய் கதளி வனமழிப்பு**

இலை, குழை உண்டு சாத்வீக குணமுள்ளோர் சாத்வீக உணவு மரக்கறி உண்போருக்கு போர்க்குணம் வீரமாய் ஒளிரும் போது, வீமன் செய் கதலி வனமளிப்பு வாழைக் குலைகள் வெட்டி வீழ்த்துவதும், பழங்கள் கனிவகை ஒடித்து விடுவதும், போரிலே நல்லவர்கள் மடிவதை உணர்த்தும் அது போர் என்றாலும், சத்தியம் அங்கே சங்கமிக்கும்.

ஆன்மாவானது மேல்நோக்கி உயர்ந்து செல்லும் போது மோட்ச காலத்தில் மிதமாக மிளிரும் அது முல்லை, முசுட்டை, காரை, கானாந்தி, பிரண்டை என ஐந்தும் ஐம் பூதங்களில் சாத்வீகத்தில் சங்கமிக்கும் சங்கதி வனவசாத்தில் காணலாம். மேன்மக்கள் உணவு அது இறந்த தென்புலந்தோர் தோட்டமது.

**அரசடி அம்மன் ஆலுயத்து அரசமரத்திலொரு கொத்து**

பீமன் வாள் மாறியதும் (தருமரிடம் வாங்கியதும்) அதே நொடியில் ஓடிச் சென்று, அரசடி அம்மன் ஆலயத்து அரசமரத்தில் ஒரு கொத்துச் செடி கொடிகள் பறித்து வந்து பாண்டவர்களிடம் கொடுப்பார். அந்தக் கொத்துச் செடியிலுள்ள முல்லை. முசுட்டை, கரை, கானாந்தி, பிரண்டை என்ற ஐந்துமே மோட்ச இலைகளாகும். அவற்றையே மறுநாள் பீமன் செய்து பாண்டவர்களுக்கு கொடுப்பார். இந்தச் செயல் பாட்டவர்களின் விராடபர்வ அஞ்ஞான காலத்தில் பீமன் வல்லாளன் என்ற பெயரில் விராடமன்னாரின் அரன்மனையில் சமயல்காரராகச் சேவை செய்தைக் குறிக்கும்.

**அஞ்ஞாத வாசமும் உண்டு**

**அது துரியோதனன் நாடுமாகும்**

**மெய்ஞான விந்தையிது, விளக்கமும் விடுகதை**

பாண்டவர் வன வாச காலத்திலே அஞ்ஞாத வாச காலம் மிகவும் விந்தையானது மாறு வேடத்தில் பாண்டவர்கள் பயந்தொடிங்கி வாழ்வது.

ஆன்மாவானது கூனிக் குறுகிச் சென்று சிவத்தையடைவதை உணர்த்தும். ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலுயத்தில் தென்மேற்கே நற்பிட்டிமுனை சேனைக்குடியிருப்பு வரைச் செல்லும் பாண்டவ வனவாசம். சேனைக்குடியிருப்பு காளி கோவிலையடைந்ததும். அங்கே வீர விளையாட்டுக்கள் நடைபெறும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெலிகள் இட்டு தேவாதிகள் இரத்தம் சிந்தி போரின் உச்சக்கட்டம், பேய் நிலையில் ஆன்மா ஈடுபட்டு இரத்தம் குடிப்பது பின் பேய் நிலை தளர்ந்து சரணாகதிடைவதும், ஆன்மா கூனிக்குறுகும் நிலையைக்காட்டும், காளி கோயில் பூசை வேள்வி முடிந்ததும் ஆலயத்தின் பின்னாலுள்ள வீதி வழியாக வயல் வெளியூடாக பாண்டிருப்பு பெரியகுளக்கட்டு வரையுள்ள வழிகள் அஞ்ஞாத கால விராட நாடு என எண்ணிக் கொண்டு வனவாசம் புறப்பட்டவர்கள் மௌனமாக வருவார்கள். பின் குளக்கட்டை அடைந்ததும், மேளம் ஒலிக்க மணிகள் ஒலிக்க ஆலுயத்தில் வந்தடைந்தும் மறு நாள் தவ நிலை நேரம் வரை அஞ்ஞாத வாச விரதம் கடைப்பிடிக்கப்பட்டு உறக்கப் பூசை கண்டு, பின் ஆன்மாவானது சோர்வு நீங்கி பேரின்ப நிலையை அடைவதை தவநிலை உணர்த்தும்.

## ஆன்ம ஈடேற்றம் அதற்கொரு மேடேற்றம் தவநிலை உணர்த்தும்

ஆன்மாவானது ஓய்வு பெறும் முன் ஓய்வு நிலையை ஏற்படுத்த உடம்பானது இடமளிக்கின்றது. எத்தனை இடையூறு இன்ப துன்பங்களிலும் மனிதன் ஈடுபட்டாலும் தியானம், தவங்கள் மூலம் ஆன்மாவுக்கு ஆறுதல் கொடுப்பது கர்மாக்களைச் செய்யும் உடம்புக்கு உரிய பண்பாகும் இதனை உணர்த்தவே அர்சுனன் பாசுபாஸ்திரம் பெறத் தவமிருக்கும் தவநிலை.

தவநிலைக் காட்சி மிகவும் பக்தி பூர்வமாகச் செய்யப்படுகின்றது. ஆன்மா என்னும் அர்ச்சுனன் என்போனது உடம்பு நிலையை குரு தீட்சண்யம், நாமம், சொல், செயல் தொழில் பாடு ஆகியவற்றால் புனிதப்படுத்தி தவ நிலைக்குத் தயார் படுத்துகின்ற பேரின்பக்காட்சி ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலுயத்தில் கண் கொள்ளாக் காட்சி. அர்சுனரை ஆலயக்குருமார் வழி நடாத்தி செல்கின்றனர் சாதாரண மனிதனுக்கு (அர்சுனர் வேடம் பூண்டவருக்கு) ஆலய, நித்திய அனுட்டானங்களில் பரிபக்குவப்பட்ட குருமார் சேவகம் புரிவது தவறாகப் பட்டாலும் ஆலயச் சிறப்பிற்கு அது தேவசேவையாக இருக்கின்றது.

ஆஸ்தரண குருக்கள், அர்சுனருக்கு, குருதீட்சன்யம், நாமம், சொல், செயல், தொழில்பாடு என்ற பஞ்சேந்திரியக்கிரிகைகளை, பார்த்தல், தொடுத்தல், அளைத்தல், பிடித்தல், நடைக்க வைத்தல், என்பதற்கேற்ப உச்சி முதல் உள்ளங்கால் வரை தொட்டழைந்து பணி விடை செய்து தவநிலைக்கு கூட்டி வரும் போது, ஏனைய குருமார் தீபங்கள் காட்டி, இருள் அகற்றி, ஒளி காட்டிச் செல்கின்ற மோனத்தைக் காணக் கண் கோடி வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரண்டி என்றொரு அழகு பெண் பேரழகால் அருச்சுனனை மயக்கவென்று மாயை செய்து தவங்குலைக்க வரும் சூது.**

பேரண்டச்சி என்றொரு பேரழகி மோகத்தால் பார்த்தனை மண்டியிட வைக்கவென்று, தோன்றுகின்ற சோதனையில் வென்று தவம் செய்யும் காரணத்தை அறியத்தரும் அருட்காட்சி அம்மா அது மெய்சிலிக்கும், பார்ப்பதற்குப்பரவசமாய் அது அமையும், காமத்தால் பெரும் பாலும் தவறுசெய்யும் உடம்பு எனும் வாகனத்தை ஆண்மா எனும் அருச்சுனன், பரமாத்மா எனும் தெய்வத்தைக் காண்பதற்கு இழுத்துச் சென்று பேறுபெறும் காட்சி இது இறைமாட்சி.

**பன்றி அது வரும் உனைக் கெடுக்க பன்றின்றி நீ இருந்தால் அது பறந்து விடும் சென்று விடும் பேறு வரும்.**

பன்றி மறித்தல் ஒரு பாங்கான நிகழ்ச்சி பாண்டிருப்பு பள்ளயத்தில் பார்த்திடலாம் வெகு சுலபமாய் ஆம் பன்றிபோல் கீழான வாழ்க்கை முறையில் சிக்குண்டு போகும் ஆன்மா, அவற்றை எல்லாம் கடந்து மேன் நிலையை அடைவதைக் காட்டி நிற்கும்.

**அரவான் பலி கொடுப்பு - அது வரலாறு காணாத பேர் இழப்பு குலம் விளங்க கொள்ளவைக்கு படைப்பு.**

ஆன்மாக்கள் சொந்த பந்தங்களால் பின்னிப்பிணையும் போது உடம்பு எனும் பந்தமான வாகனத்தின் மீது பற்றுகொண்டு சவாரி சென்றன. சவாரியில் மயங்கும் ஆன்மா விழித்துக் கொள்வது போல், மகா வீரனான அரவானை வேதனையோடு பலியிடுவது போல், உடம்பிலுள்ள பற்றைத் திடீர் என ஆன்மா விட்டு பரமாத்மாவைச் சரணடைவது போல் இருக்கும்.

**அள்ளி வரும் வெள்ளி, அரும் பொழுது, கொள்ளி வைத்து தீ மூட்டி, அடிக்கொரு பூசை, வேள்வி வாசல் சிறக்கும் விஸ்வப்பிரம குலத்தால்**

தீப்பாயும், தீப்பள்ளய நேரம் உபயத்தை உவப்போடு செய்து செருக்கோடு செய்கின்ற சேவைகள், வியக்கவைக்கும் பட்டு வேட்டிகள், சரசரக்க, வெள்ளைச் சேட்டுக்கள், விதவிதமாய்த் தங்க நகை ஜொலிக்க வெள்ளைப் பிராமணர் போல் பிரகாசிக்கும் குலத்தவர்கள் பெருமையில், பாண்டிருப்பின் பெருமை மேலும் சிறக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிராத்த மென்னும் கடல் குளிப்பு ஜல தர்பண மென்று அது இருப்பு!

ஆன்மாவானது கங்கையில் குளித்து புனிதமடைகின்றது. தெளி நிலை கண்டு மோட்சத்திற்கு தயாராகும் போது அன்மாவுக்கு உடம்பு உதவுகிறது. சிராத்தமாய் ஜலதர்ப்பணமாய் கடல் குளிப்பு நடந்து.

உடம்பை விட்டு ஆன்மா விடுபட்டு, உடம்பு நிலையகன்று உருவமற்ற ஒளியாய் இருக்கும் ஆன்மா நிலையை மஞ்சள் பூசிய பின் அனைவரும் தோன்றும் ஒரே மஞ்சள் உருவங்கள் வேறு பாடற்ற ஒளி உருவங்கள் தீயில் நடக்கும் போது சோதியில் ஆன்மா கலப்பதையும், மோட்ச நிலையையும் உணர்த்தும்.

## தில (எள்ளு) தர்ப்பணமாய், தீய்க்குளியில் அரிசியெனும் அட்சதை எனும் மஞ்சள் வஸ்து.

தர்பணமாய் அரிசியிட்டு சந்ததிக்கு உணவளித்து வாய்க்கரிசி இடுவது போல் உடம்பு செய் கருமாதிகள் முடித்து ஆன்மா நிலையில் உயிர் பிரிந்து தெய்வச் சோதியில் கலப்பது போல் தீக் கடக்கும் காட்சி களிப்பிருக்கும். அது எமக்கு கடவுள் கருணை ஒளியை உணர்த்தும்.

## மோட்ச தீபமாய் தீக்குளிப்பு சோதி ரூபமாய் ஆன்மா எடுப்பு

ஆன்மாவானது சோதியில் கலந்து சிவமாவதை உணர்த்தும் தீக்குளிப்பு - அது இங்கே சிறப்பாக நடைபெறும். எந்த ஆலயத்திலுமில்லாத எழில் சிறப்பு பதினெட்டடியில் குளி? பாய்வதற்கு பக்குவம் தேவை.

பல ரூபத்தில் தோன்றிய ஆன்மாவானது, ஒரே நிலையில் மாறாத நிலையில் எல்லாம் முடித்து சிவத்தையடைகின்றது. ஆன்மா, ஒளியானது, இதனை உணர்த்துவது தீப்பாய்தல் நிகழச்சி தீயில் இறங்குகின்ற அத்தனை மனிதர்களும் பூசாரிமார் முதல் பாண்டவர்கள் தேவாதிகள், பக்தர்கள் முதல் மஞ்சள் பூசிக்கொண்டு ஒரே ரூபமாகக் காட்சி தருவது ஆன்மா ஈடேற்றம் ஏற்படுத்துவதை காட்டுகின்றது.

ஆன்மாவானது இறைவன் திருவடியில் சேர்வதை உணர்த்துவது தீய்க்குளிப்பு மேடை முன்னால் தெய்வங்கள் வைக்கப்பட்டு பூஜிக்கப்பட்ட, தீயில் நடப்பவர்கள் தெய்வத்திடம் போவது ஆக தீமிதத்தல் மோட்சம் சிறந்த இறப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீக்குளி முன்னால் திரு உருவங்கள்
## தீயில் வரும் ஆன்மாவுக்கு வைகுண்டக் காட்சிகள்.

தீக்குளித்தல் முடிந்ததும், பார்த்தன் பாஞ்சாலி பாண்டவர் தெய்வங்கள் முன்வணங்கிச் செல்கின்றனர். ஆன்மாவானது கன்மவினைக் கேற்ப மோட்ச நிலையடைகின்றது, பாபம் செய்த ஆன்மா மோட்ச நிலையில் தண்டனை அடைவது போல் தேவாதி நிலையில் தீப்பாய்ந்த வர்கள் ''சாட்டை" எனும் சடங்கை ஏற்பதும் பாண்டவர் கொலுவினர் அமைதியாக இருப்பதும் பாண்டிருப்பில் சிறந்ததொரு இருப்பு.

## சாட்டை எனும் தெய்வ அடி
## சார்ந்த பிழைக்கு தெய்வத் தீர்ப்பு.

பாபம் செய்த ஆண்மா நரகலோகத்தில் தண்டனை பெற்று பாபவிமோசனம் பெற்று மோட்சமடைவதை உணர்த்தும் சாட்டைகள், பலிகள் திருந்திய ஆன்மாவுக்கு மதிப்பளிப்பதை உணர்த்தும் சாட்டை அடியில் ஒரு தனிக்கூற்று.

## பாலூற்றிப் பால் பள்ளயம்
## காடாற்றிக் கங்கையில் கரைப்பு

பால் பள்ளயம் எனும் பாங்கான பரிபக்குவ நிகழ்ச்சி விரதாதிகளுட்பட கட்டுக்கு நிற்போர் முதல் தீக்குளியில் பால் ஊற்றுகின்ற நிகழ்ச்சி. பாரதப்போரில் மாண்ட கௌரவர்கள், பாண்டவர்கள் குலாதிகளுக்காகச் செய்யும் பிதிர் வாழிபாடு, அக்கினியில் ஆகுதி செய்து பிதிர் காரியம் பண்ணுகின்ற பீடை போக்கும் அருள் வழிபாடு. காடாற்றிக் கங்கையில் கரைதலுக்கு ஒப்பானது ஜீவாத்மாவை பரமாத்மாவோடு இணைத்து முக்தி காணும் பேரின்ப நிகழ்ச்சி, சந்ததி மேன்மைக்காக, உலக மேன்மைக்காக செய்யும் நிறைவு நிகழ்ச்சி.

## கூண்டோடு கைலாயம் போகும்
## தென்திசை ஊர்வலம், வைகுண்ட வாசம்

பாண்டவர்கள் தம் சந்ததிக்கு அரசாட்சியை விட்டுக்கொடுத்து யுக முடிவுக்காக மோட்சமடைய தென்புல வாசம் சென்று கைலாயப் பேறு வைகுண்ட வாழ்வு பெற தென் திசை நோக்கியே சென்றனர். இதனை உணர்த்தவே பாண்டிருப்பின் தெற்கு நோக்கி உற்சவத்தின் இறுதி நிகழ்ச்சியாக அம்மன் முத்துச்சப்பரத்தில் ஊர்வலம் சென்று துவாரகாபுரி எனும் மாணிக்கப் பிள்ளையார் ஆலயம் செல்லல். எந்த ஆலய ஊர்வலமும் - வலமாகச் சென்று திரும்பும், பிரதே ஊர்வலம் எப்போதும், இடமாகச் சென்று திரும்பும். இதனடிப்படையிலேயே இறுதி ஊர்வலமும் இடமாகச் சென்று தெற்கு திசை நோக்கி சென்று மேற்கே மாணிக்கப்பிள்ளையார் ஆலயம் சென்றடையும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பள்ளயம் பிறந்த கதை





நடந்தனன் தாதன் உருவெடுத்து
நாரணன் தன்னை மனத்திருத்தி
படர்ந்த சடையுடைத் தாதனுமே
பாவை திரௌபதி போல் நடந்து
ஆலயந்தன்னைச் சுற்றி வந்து
அற்புதமான தீக்குளியில்
பாளை அரிசி மஞ்சல்தனை
பக்குவமாகவே கலந்தெடுத்து
பூவெனும் தீயில் தான் போட்டு
புனிதனாம் தாதன் நடந்தனனே

தாதனும் தீயில் நடத்தல் கண்டு
தக்கதோர் வன்னிமை ஊரவரும்
தீயில் பிறந்த திரௌபதையாம்
தெய்வத்தின் சக்தியைத் தான் பார்த்து
வேதங்கள் நான்கொடு ஐந்தான
பாரதக்கதையின் தத்துவத்தை
பாரில் உள்ளோரும் அறிந்திடவே
தாதனும் பாண்டிருப்பூரினிலே
தக்கதோர் பத்தாசி முறைப்படியே
கோயில் அமைதங்கு பூசை செய்தான்

நன்றி : ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலய வழிபாடும் வரலாறும்
தி. பாஸ்கரன் (பாண்டித்துமிலன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீப்பள்ளயம்

ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலய வரலாறு - கா.வே.சன்முகநாதன்

பண்டுதொட்டு பாண்டிருப்பு எனும் கிராமத்தில் பாண்டவர்கள் பாஞ்சாலியுடன் உறைந்திருக்கின்றனர். பாண்டவர்களின் இருப்பிடமாக இருந்ததனால் இவ்வூர் பாண்டிருப்பு, என்னும் நாமத்தைப் பெற்றதென்பார் இப்பழம் பெருமை மிக்க இக்கிராமம் மட்டுமாநகருக்குத் தெற்கே இருபத்தைந்து மைல் தொலைவில் கல்முனை நகருக்கருகாமையில் அமைந்துள்ளது.

பாண்டிருப்பில் அமைந்துள்ள பாண்டவர்களின் கோயிலில் நடைபெறும் இத் தீப்பள்ளைய நிகழ்ச்சியில் அகில இலங்கையிலும் இவ்வூரின் கீர்த்தி பரவியுள்ளது. இக் கோயிலில் நடைபெறும் திருவிழாவை மற்றைய கோயில்கள் போன்று தேர், தீர்த்தம், திருவிழாவென அழைப்பதில்லை. இது மட்டக்களப்புத் தமிழில் 'தீப்பள்ளயம்' என்றே அழைக்கப்படுகின்றது. பள்ளயம் என்றால் பெருவேள்வி எனப் பொருள் படும். இத் திருவிழாவின் இறுதி நாளன்று திரௌபதி அம்மனுக்கு அளிக்கும் பெரும் தீ வேள்வியே 'தீப்பளயம்' என்ற இப் பெயர் வரக் காரணமாயிற்று.

இத் தீ வேள்வியினாலேயே இக் கோயிலின் கீர்த்தி பரவலாயிற்று அதை விட ஆதியில் இலங்கையில் திரௌபதி அம்மனுக்கென ஆலயம் முதன் முதலில் அமைந்தது பாண்டிருப்பிலே ஆகும். இதனைப் பட்டயங்கள் வாயிலாக அறிந்து கொள்ள முடியும். அதன் பின்னரே இலங்கையில் பல பாகங்களிலும் திரௌபதியம்மனுக்கு ஆலயம் எடுத்தனர் என்று அறிய முடிகின்றது.

## வரலாறு

இவ்வாலயம் ஆராச்சியாளர்களால் அனுகி ஆராயப்பட வேண்டிய பழயமை வாய்ந்ததாகும். ஆனால் மட்டக்களப்பின் சரித்திரத்தில் முக்கிய இடத்தைப் பிடிக்காத இக்கோயில் வரலாறு காணப்படுகின்றது. அதற்குக் காரணம் இக்கோயில் வரலாற்றில் இரண்டு அரசர்கள் சம்பந்தப்பட்டி ருப்பதேயாகும்.

இன்றை சந்ததியினர் இதனை விளக்கமாக அறியும் பொருட்டு இதனைச் சுற்று விரிவாகப் பார்ப்போம். இவ்வாலய வரலாறு மிகத் தொன்மை வாய்நததாலும் வாய்வழியே கூறப்பட்டு வந்தாலும் இன்றைய இக்கோயில் நிர்வாகத்தினர் கூட இதனைச் சரிவர அறியமால் இருக்கின்றனர். இதனை இன்றைய தலைமுறையினர் மட்டுமன்றி சந்ததியினரும் அறிந்து கொள்ளும் வண்ணம் இது ஆராய்ந்து அறிய வேண்டியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாருத சேனனுடைய புத்திரன் எதிர் மன்னசிங்கன் மட்டக்களப்புப் பகுதிக்கு சிற்றரசனாக இருந்த காலத்திலே சிதைவுற்ற சிவாலயங்களைச் செப்பனிட்டு ஆறுகாலம் பூசையும் புரிவித்துத் திக்கதிபதிகள் வைத்து அரசுபுரியுங் காலம் வட நாட்டுக் கொங்கு நகரில் இருந்து தாதன் என்னும் சமயப் பெரியார் வைஷ்ணவ மதத்தைப் பரப்பும் நோக்கங் கொண்டு மகா பாரதத்தோடு பல இதிகாசங்கள்களையும் எடுத்துக் கொண்டு காவி மண்டல தாரியாய் வேடம் பூண்டு இலங்கை மட்டக்களப்பு பகுதியை வந்து சேர்ந்தார்.

இப்பெரியார் அந்நாளில் நாகர்முனை என்று பெயர் பெற்ற திருக்கோயில் சந்நிதியைக் கண்டு தரிசித்து அங்கேயே தங்கியிருந்து மகா பாரத இதிகாசத்தை அங்கேயே போதித்தனன். இதை அறிந்த திக்கதிபரொருவர் எதிர் மன்னசிங்க நிருபனுக்கு அறிவித்தனர் எதிர் மன்னசிங்க நிருபன் திருக்கோவிலுக்கு சென்று தாதனின் குலம் கோத்திரம், நாமம் சுயநாடு இவைகளை விசாரித்தான்.

தாதனும் அரசனை நோக்கி அரசே என் குலம் வசியன் என் நாமம் தாதன் எனது கோத்திரம் விஷ்னு எனது நாடு கோங்கு நகர் நான் பாண்டவர் குலத்துத் தருமாதியார்களுக்கு நாகர் குலத்துத் துரியோதனாதிகள் செய்த தீமைகளை காண்பிக்கும் படி வந்தேன் என்றான்.

எதிர் மன்னசிங்க மன்னனும் அதனை அறிய விரும்பினான் இது பற்றி விளக்கிக் கூறிய தாதன் மகாபாரதத்தில் சொன்ன படி பாண்டவர்கள் வனவாசம் செல்லுதல் பார்த்தன் சிவனிடத்தில் பாசுபதம் பெறுதல், துரியோதணாதியாரைக் கொண்றதும் அரவாணைக் களப்பலி செய்ததும், பின்பு அக்கினி குளித்து மீண்டும் இந்திரஸ்தம் அத்திபுரம் இவைகளை அரசு செய்ததுங் காண்பிக்க வேண்டும் அதற்குச் சமுத்திரக் கரை அருகும் ஆல விருட்சம் நிறையப் பெற்ற இடமும் அதற்கு அப்பால், வனமும் இருக்கும் இடத்தில் தான் காண்பிக்க வேண்டும் என்று வேண்டினான்.

அரசனும் சம்மதமுற்று அனைவரும் கடலருகாய் வரும் போது இக்கிராமம் தாதன் வேண்டியபடி உரிய வசதிகளுடன் காணப்பட்டது. அந்த இடத்தில் பாண்டவருடைய உறுப்பை ஆறு பேருக்கு உண்டாக்கி அதனை நம்பும்படி தீ வளர்த்து அதிலிறங்கி மீண்டு காட்டினான். அரசனும் மகிழ்ந்து ஆலயம் உண்டாக்கிப் ''பாண்டுறுப்பு'' எனும் நாமம் சூட்டி வங்கர் குலத்துத்திக்கதிபரே பரிபாலிக்கும் படி திட்டஞ்செய்து தன்னிருப்பிடம் சென்றனன்.
''பாண்டுறுப்பு'' என்னும் நாமம் நாளடைவில் திரிந்து இப்போது ''பாண்டிருப்பு'' என வழங்குதலைக் காணலாம்.

இதுவே இக்கோயில் அமைந்த வரலாறெனலாம். ஆனால் இது எக்காலம் ஆரம்பிக்கப்பட்டது. என்பது அறியவேண்டியதே! இதற்கு மூடுமந்திரமாகப் போற்றப்படும் கல்வெட்டினைப்பார்ப்போம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாதன் கல்வெட்டு

ஆரம்பத்தில் தாதனால் ஆரம்பிக்கப்பட்ட இக்கோயில் தாதன் கோயில் என்றே அழைக்கப்பட்டு வந்தது. இதே போன்று இவ்வாலயக் கல்வெட்டும் தாதன் கல்வெட்டு என்றே அழைக்கப்படலாயிற்று.

''மேவு பூவுலகில் திருமாலமைத்த வொழுங்கைப்பார்!
மேவு தாதன் பகுக்க மனத்திலுன்னி
அரியோன் பதத்தை அடிபணிந்து தெண்டனிட்டு
குருவின் கையில் குதித்தோர் சரித்திரத்தை
மடலில் வரைந்து மனத்தை ஒருப்படுத்திக்
கொடையில் சிறந்த குகனிடத்தில் செல்லவென்று
காவி உடுத்திக் கமண்டலமும் கைப்பிடித்து
ஆவி அடக்கி அஞ்செழுத்தை உச்சரித்துப்
பல்லோர் புகழப் பாருலகோர் ஈடேற
வில் விசையன் செய்தவத்தை மேன்மை பெறக் காசினியில்
பத்ததி போற்காட்டிப் பகுத்தறியத் தாதனுந்தான்
சுற்றம் மகிழத் துதித்தெழுந்து தென்னிலங்கை
சென்று மட்டுமாநகரில் திருக்கோயில்
சந்நிதியைக் கண்டு நமஸ்கரித்துக் கைகூப்பி நிற்கையிலே
கலிங்க குலத்துக் காவலனுமப் பொழுது
இலங்கு திருப்பணிக்கு இடு பூசை காணையிலே
பாரத நாட்டிற் பிறந்தான் எனவறிந்து பார்வேந்தன்
இரத நடவீதி யென்னும் இடம் வரவழைத்து
எதிர்மன்ன சிங்கமென்னும் நரபதியும்
கதிதங்கும் இப்பதியில் கண்டதில்லை உந்தனைத்தான்
ஆர நீரறையும்........... சுந்தரஞ்சேர்
பேரேது ஊரேது பெருமையுடனேதுமென்னத்
தாதன் மனமகிழ்ந்து தாரளந்த மாயவன்றன்
பாதம் பணிந்து பரிவுடன் ஓதுகின்றான்
கோங்கு நகர் மேவுங் கோவசியர் தன்குலத்தில்
பாங்குடனே நானுதித்துப் பாரதமென்றார் மதத்தை
வங்கம் கலிங்கம் மலையாள புத்திபுரம்
அங்கங்கு சென்று அரியோன் அடியார்க்குக்
காட்டிய பின் தென்னிலங்கைக் கலிங்கர் குலத்தோர்க்கு
கூடநினைவு கொண்டு துளசி மாலையிட்டு
வந்தேனெனது மரபிதென்ன மன்னவனும்
சந்தோஷமாகித் தாதன்றனைத் தழுவி
வடவால் நிறைந்திருக்கும் வனமும் கடலருகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடவாகத் தேடி ஆழி அருகாய் வரவே
கண்டார்கள் ஆல் வனத்தைக் கடலுமருகிருக்க
தொண்டார் தாதன் துதித்து நமஸ்கரித்துப்
பஞ்சாட்சரத்தைப் பதித்து மனத்தொன்றாக்கிக்
கஞ்சன் முதலாக ஐவர் விந்தஞ் சேர்ந்தமட்டும்
தீட்டி ஒளியாக்கிக் தீவளர்த்துப்பாய்ந்த பின்பு
கரிசனையோ நம்பி சிறை கட்டுவதற்கு சட்டமுடன்
தீர்த்து எதிர்மன்னசிங்கன் மனம் மகிழ்ந்து
பார்த்தவர்கள் கொண்டாடப் பாரதத்திற் சொன்னபடி
கம்பம், வனவாசம், கடல்குளித்துத் தீப்பாய்தல்,
அம்புவில்லுத் தண்டுடனே ஐவர் கொலுவாக்கி வைத்து
ஆடலோடு பாடி ஆதி துரோபதிக்கு
மாடமுயர் கோயில் வரிசையுடன் இயற்றி
கும்பிட்டார். தெண்டனிட்டார் குவலயத்தைக் காருமென்றார்.
தம்பட்டம் சல்லாரி தாரைசின்னஞ் சங்குதொனி
உடுக்குச் சிலம்பு மணி ஒளிதங்கு, தீபம் மெழ
அடுக்கு முறையோ டரவான் களப்பலியும்
பத்ததி போறகாட்டிப் 'பணிக்கன் குலத்தோர்க்கு'
உற்றபுகழ் மேவ உங்களுக்கே முன்னீடு
ஈந்தோனிலங்கை எங்குமுயர்ந்தோங்க
ஆய்ந்து பணி செய்கென் றகல மன்னப்பொழுது
பதினெண் வரிசையோடு பத்தும் பதியுடனே
மதி வெண்ணொளி பரப்ப மாயோன் மதமோங்க
கண்டோர் களிகூரக் காசினியோர் கொண்டாட
என்றும் பாசிதமாயிப் பதியைப் பெற்றதினால்
ஆவினங்கள் வாழ அறமுயர்ந்து சாவி எழப்
பாவானர் பாடப் பல்லுரெல்லாம் வாழ்க!
மாதத்தில் மூன்று மழை மட்டுநகர் பெய்துவர
என்றார் பணிக்கர் குலத்ததிப னேந்தலிடம்
கண்டறிந்து மாயவன் கருணைதனை யுண்மை யென்று
'விமலதரு மனென்' னும் வேந்தனக மகிழந்து
கமல விழிக் கண்ணன் கருணை தங்குமிப்பதிக்கு
வேண்டும் வயல் நிலமும் வெள்ளிக் களஞ்சியமும்
தூண்டு திகிழி தந்தம் சோதியெழ யீந்து மன்னன்
'கண்டி நகர்' சென்றான் காசினியோர் தாமறியப்
பண்டு முற்ற என்றென்றுர் பார்.

இதுதான் தாதன் கல்வெட்டு இதனை மூடி மறைத்து வைப்பதினால், எம்மூர் மக்கள் இதனை அறியாதும் இதனால் பெறப்படும் பல உண்மைகளையும் அறிய முடியாமல் இருப்பதும் இயல்பே! இது பாண்டிருப்பில் வாழும் ஒவ்வொரு மகனிடமும் இருக்கவேண்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவேதான் இதனை இங்கு முழுமையாகத் தந்தோம் மேற் கூறிய வரலாற்றை இதில் கண்டு தெளிந்திருப்பீர்கள்

இவ்வாலயம் எழும்பிய வரலாற்றுக் காலத்தை ஆராய்ந்து பார்ப்பதற்கு இப்பாடலில் வரும் கண்டிமாநகரை ஆண்ட விமலதசூரியன் என்னும் மன்னன் இவ்வாலயத்தின் அருமை பெருமைகளை அறிந்து இவ்வாலயத்துக்கு வந்து பரவசமடைந்து பல நிலபுலன்களும் பொன், வெள்ளி, தங்கம், தந்தம், இரத்தினம் போன்ற பொருட்களை காணிக்கையாய் ஈந்து சென்றனன் என்பதனால் அறியக்கிடக்கிறது. கண்டி நகரை ஆண்ட விமலதர்ம சூரியனின் ஆட்சிக்காலம் கி.பி. 1594 முதல் கி.பி. 1604ம் ஆண்டு வரை என்று பல ஆராய்ச்சி நூல்களால் அறியமுடிகிறது. ஆகவே இக்கோயில் இதற்கு முன்னர் எழுந்திருக்கவேண்டும் என்று துணிய இடமுன்டு. இதிலிருந்து இக்கோயிலின் பழமையை அறியலாம்.

இதனை மேலும் நிருபிக்கும் பொருட்டு எதிர்மன்னசிங்க மன்னவனின் ஆட்சிக்காலத்தை ஆராய்ந்தால் உண்மை புலப்படும். எதிர்மன்னசிங்கனின் வரலாறு கூறும் பாடலில் அவன் முடிசூட்டிய பாடலில் பின்வருமாறு காணப்படுகின்றது.

'கார் தொலைப்பானென யிலங்கைக்
கனகமுடி மன்னரெல்லாங் களித்து வாழ்ந்ததக்
சீரி லங்கும் மட்டமெனுங் களப்பு நாட்டைச்
சிறந்த கலிபிறந்து நாலாயிரத்தறு நூற்று நாற்பதாண்டில்
பார் செழிக்க முடிபுனைந்தான். தோப்பாவைப்
பண்டதாக்கி பருதிகுலன் பவனியாய
தேரினிடம் வலந்திரிந்து செங்கோலோச்சு
மதிப்பவரசர் மரபனென்னும் எதிர்மன்னசிங்கன்தானே!

என்பது அப்பாடல் இதில் கலி பிறந்து 4640ம் ஆண்டில் மன்னன் எதிர்மன்னசிங்கன் முடி சூட்டி ஆட்சிபீடம் ஏறினான் என்றும் மேலும் அவனது சரித்திரம் மூலம் நாறபத்தி நாலு ஆண்டுகள் ஆட்சி புரிந்தான் என்றும் அறியக்கிடக்கின்றது. இதனை உற்று நோக்கினால் இக்காலப்பகுதியில் இவ்வாலயம் இம்மன்னனால்கட்டப்பட்டிருக்க வேண்டும் என்று துணியலாம். இது கி.பி.1539 முதல் கி.பி.1583 காலப்பகுதியாகும். ஆகவே அவ்வாலயம் தோன்றிய காலத்தை இதிலிருந்து நிர்ணயித்து இதன் பழமையை அறிந்து கொள்ளலாம்.

எதிர்மன்னசிங்கனின் கடைசிக் காலமான 1570-80 களில் இது கட்டப்படடிருக்கலாம் என்றும் எண்ணினாலும், விமலதரும சூரிய மன்னன் வந்து தரிசித்த அவனது ஆட்சிக் காலத்தை (கி.பி.1590-1604) நோக்குமிடத்து கிட்டத்தட்ட ஒத்திருத்தலைக் காணலாம். ஆகவே விமலதரும சூரியன் காலத்துக்கு முன்பே கட்டப்பட்டது. என்று நான் துணியலாம். இது தெட்டத்தெளிவாகவே இவ்வரலாற்றில் காணப்படுகிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வழிபாடு

வழிபாட்டு முறை இதில் சொன்னபடி அன்று தொட்டு இன்றுவரை நடைபெற்றுவருகின்ற பெருமையைக் காணலாம். ஐவர் முதல் திரௌபதி, கண்ணபரமாத்மாவுடன் இன்னும் பலரும் கொலுவிருக்க இன்றும் பூசை ஆராதனைகள் நடைபெற்று வருகின்றன. இங்கு வருவோர் கல்யாணக்கால் வெட்டுதல், வனவாசம் செல்லுதல், பார்த்தன் பாசுபதம் பெற தவநிலைக்குச் செல்லல், அரவாணை களப்பலி கொடுத்தல், கடல் குளித்து தீப்பாய்தல் என்பன எல்லாம் நியமம் தவறாது நடைபெறுதைக்காணலாம்.

மகாபாரதப்போர் பதினெட்டு நாட்கள் நடந்ததைக் குறிக்கும் முகமாக இவ்வாலயத்தில் பூசை ஆராதனைகள் கொடியேற்றத்துடன் ஆரம்பித்து 18 நாட்களுக்கு நடைபெறும். இந்த வழிபாட்டுக்காலத்தில் மகா பாரதக் கதை முழுவதும் படித்து பயன் சொல்வது பாரம்பரிய வழக்கப்படி இன்றும் இங்கு நடந்து வருவதைக் காணலாம்.

வழிபாட்டில் இப்போது காலத்திற்கேற்ற வகையில் 'பலிகொடுத்தல்' நிறுத்தப்பட்டுள்ளது. நாம் இன்னும் காணும் ஒரு குறை என்னவெனில் கல்வெட்டில் குறிப்பிட்டபடி

"தம்பட்டம் சல்லாரி தாரை சின்னஞ் சங்குதொனி
உடுக்குச் சிலம்பு மணி ஒளிதங்கு தீப மெழ"

பூசை ஆராதனை நடைபெற்றதைக் காணலாம். இன்று இவை எல்லாம் இருக்க உடுக்கையின் நாதம் இன்று எழுவதைக் காணோம் கோயிலைச் சுற்றி வருங்கால் பாடலுடன் இதனை முன்னர் அடித்து வருவதுண்டு இந்த வழக்கு மாறக் காரணம் யாதென நாம் அறியோம். இது மீண்டும் கடைப்பிடிக்கவேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பரிபாலனம்

தாதன் கல்வெட்டுப்படி இவ்வாலயத்தின் பரிபாலனம் 'பணிக்கர் குல' மென்னும் 'பணிக்கனா குடி" என்று இன்றும் வழங்கி வரும் முற்குகர் வகுப்பில் அடங்கிய குடிகளில் ஒன்றிடமே கையளிக்கப்பட்டதைக் காண்கின்றோம். இவ்வாறான குடிப்பிரிவுகள் பண்டு தொட்டு நிலவி வந்த போதும் இவை ஆலயபரி பாலத்துக்காக ஏற்பட்டனவே அன்றி நம்மிடையே சாதிசமய உட்பூசலை ஏற்று விக்கவல்ல என்ற உண்மையை நாம் உணர வேண்டும்

இன்றும் இவ்வாலயத்தின் பரிபாலனம் பணிக்கனா குடித்தலைமையில் இருப்பதும் இக்குடியே பெரும் குடியாக இருப்பதானால் இக்குடிக்கு ஆலய பரிபாலத்தில் முக்கியத்துவம் கொடுக்கப்படுவதும் கூடிய 'முகாமைக்காரர்கள்" இருப்பதும் இரண்டு பூசைகள் இருப்பதும் அவர்களது 'கல்யாணக்கால்' வெட்டுதல் என்னும் சிறப்பான பூசையுடனே கோயில்களை கட்டத் தொடங்கி கொண்டாட்டம் விமர்சை அடைவதும் இன்றும் காணக்கூடியது.

கோயிற்பூசைகளுக்கென பின்வரும் குடிகள் வகுக்கப்பட்டுள்ளன. இக்குடிகளின் முகாமைக்காரர்கள் பூசைகளை குடிமக்களிடமிருந்து பணம் அறவிட்டு செய்யவும் நிர்வாக சபையின் சாதாரண அங்கத்தவராயும் இருக்க காணலாம். இக்குடிகளுடன் பின்வரும் சாகியங்களும் சேர்க்கப்பட்டு அவர்களுக்குச் சிறப்பான பூசைகள் ஒதுக்கப்பட்டிருத்தலையும் காணலாம்.

குடிகள் சாகியங்களின் விபரம் வருமாறு

01. வீரச்சோலை வேளாளர் குடி
02. பெத்தான் குடி
03. பணிக்கொணா குடி (இரண்டு விதம் இரண்டு பூசைகள்)
04. வெள்ளரசர் குடி
05. மூங்கில்சோலை வேளாளர் குடி
06. சுருவிளி குடி (வேளாளர்)
07. படையாண்ட குடி
08. மழுவரசன் குடி
09. சின்னமடவர் குடி
10. சங்கரப்பத்தான் குடி
11. மொட்டைச் செட்டி வேளாளர் குடி (தோரணப்பூஜை)
12. நாவிதர் சமூகம் - சோடனை
13. சாண்டார் சமூகம் - வனவாசம்
14. வண்ணார் சமூகம் - பகல் பூசை வழிபாடு
15. தட்டார் சமூகம் - தவநிலையும், தீய்பாய்தலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதைவிட வேறு பல கோயில்களில் இன்னும் பல குடிகள் வழங்கி வருவதைக் காணலாம் இக்குடிகள் ஆலயம் அதனைச் சூழவிருந்த மக்களைக் கொண்டே வகுக்கப்பட்டதென்பதே இதிலிருந்து புலனாகின்றது.

இவ்வாலயத்தின் பரிபாலனம் இன்று சிறப்பான முறையில் நடைபெற்ற பொழுதிலும் இதில் ஏற்பட்ட பிணக்குகளையும் இன்னும் மக்களுக்கிருக்கும் குறையும் இங்கு எடுத்துக் காட்டாவிடில் இது நிறைவு பெற்றதாகாது. இவ்வாலய பரிபாலனத்துக்கு எதிராக 1929ம் ஆண்டு ஒரு வழக்குத் தொடரப்பட்டு அதற்கு தீர்ப்பு 1931ம் ஆண்டு வைகாசி 26ல் வழங்கப்பட்டுள்ளது. டிஸ்றிக் கோட் வழக்கு இல. 6978 ஆகும்.

இத்தீர்ப்பில் வழக்காளிகள் எதிரிகளின் நேர்மையீனத்தை அல்லது தவறான பரிபாலனத்தை ருசுப்படுத்தவில்லை என்பது எனது கொள்கை என்று கூறிய நீதிபதியவர்கள் பின்வருமாறு கூறியிருப்பதையும் காணலாம்.

''ஊரெங்கும் நின்றுலாவும் சுயாட்சிப் பேச்சில் இவர்களும் பிடித்துவிட்டனார். தங்கள் பணத்தைத் தாங்களே கையாளவும், தங்கள் கருமத்தை தாங்களே நடத்தவும் எண்ணுகின்றனர்".

1929 - 31ம் ஆண்டிலே இவ்வாறான நோக்கம் குடி கொண்டதெனில் பின்னர் எவ்வாறு இருந்திருக்கும் என்று விளக வேண்டியதில்லை. பின்னர் 1975 - 78ம் ஆண்டுகளில் ''ஸ்ரீ திரௌபதை அம்மன் புனருத்தாரண சபை" ஒன்று ஸ்தாபிக்கப்பட்டு அதுவும் ஆலய பரிபாலன ஊர் மக்களின் கைகளுக்கு வர வேண்டும் என்று வாதாடினர். முடிவு ஈடேற்றவில்லை என்றே கூறவேண்டும்.

அன்று ஊரில் சனங்கள் இல்லாததாலும் நற்பிட்டிமுனை என்னும் கிராமமே மக்கள் வாழும் கிரமமாக இருந்தபடியாலும் பணிக்கணா குடியில் படித்த நீர்ப்பாசன உத்தியோகம் இருந்ததினால் இவ்வாலயம் பரிபாலனம் அவர்களிடம் இருந்தது, இப்போது அது உருத்து வழி அங்கேயே இருந்து வருகின்றது. கோயிலும் கோயிலில் பூசையும் செய்யும் முகாமைக் காரர்களும் இங்கேயே இருக்க கோயிலின் முக்கிய பதவிகளான தலைவர், உபதலைவர், செயலாளர், என்பன போன்றவை அங்கிருப்பதை மக்கள் விரும்பாதத்தின் விளைவே இது.

இவை கல் வெட்டின் படி பணிக்காணா குடிமக்களிடமே இப்போதும் இருந்து வரினும் இப்போது பாண்டிருப்பிலும் அக்குடி மக்கள் நிறைந்து இருப்பதனால் இப்பதவிகள் தங்களுக்குள் வந்து சேரவேண்டும் என்று அவர்கள் கேட்பது இயல்பேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில் பரிபாலனத்தின் தலைமைப் பதவிகளும் மற்றும் முகாமைப் பதிவிகளும் (நிர்வாக சபை உறுப்பினர்) கூட வழிமுறையிலே தெரிவு செய்யப்பட்டு வருவதை இன்றும் காணலாம்.

''வேரோடி விளாத்தி முளைத்தாலும் தாய்வழி தப்பாது'' என்பார்கள் இதற்கொப்ப குடிவழி தப்பாதிருக்கும் பொருட்டு தாய்வழி மூலம் இதனைத் தெரிவு செய்து வரும் வழக்கத்தைப் பண்டு தொட்டு கைக்கொண்டு வருகின்றனர். இதனால் பாரம்பரிய பழைய முறைகள் இன்றும் வழுவாமல் நிலைபெற்று நின்று வருகின்றன.

தாதனால் ஸ்தாபிக்கப்பட்டதினால் இக் கோயில் 'தாதன் கோயில்' என்று அழைக்கப்பட்டதைக் கண்டோம். பின்னர் இதுவோ மகா பாரதத்தின் நாயகனான கிருஷ்ணனின் பேரால் 'கிருஷ்ணன் கோயில்' என்றும் இடையில் அழைக்கப்பட்டது. ஈற்றில் திரௌபதியை நாயகியாகக் கொண்டு வழிபாடுகள் நடைபெற்று வந்ததினால் 'திரௌபதையம்மன் கோயில்' என்ற பெயர் நிலைபெற்று நின்றுலாவி வருகின்றது.

அம்மனின் அருளாட்சி நடக்கும் இவ்வூர் பல இயற்கை அழிவுகளில் நின்றும் வன் செயல்களிலிருந்தும் பாதுகாக்கப்பட்டு வருவதை உணர்ந்து இவ்வூர் மக்கள் அம்மனின் அருளைப் போற்றி மெய்சிலிர்த்து நிற்கின்றனர். திரௌபதை யம்மனுடன் கண்ண பராத்மாவும் எழுந்தருளி இருப்பது இக் கோயிலின் இன்னுமோர் சிறப்பம்சமாகும். அதர்மத்தை அழிக்க அவதரித்த இப் பகவர் எம்மையும் அவற்றில் காப்பாராக என்று வேண்டி நூலின் விரிவஞ்சி இதனை நிறைவு செய்கின்றேன்.

---

குறிப்பு : இக்கட்டுரை ஆசிரியர் கா.வே. சன்முகநாதன் பாண்டிருப்பைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டவர் என்பதும் ஸ்ரீதிரௌபதி அம்மன் ஆலயத்திற்கு 1989, 1990ம் ஆண்டுகளில் நிருவாகத் தலைவராகவும் இருந்து பாண்டிருப்பாரே தலைவராகவேண்டும் என்பதை உருவாக்கிய முதல்வராகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாதனும் கவுத்தனும் கண்ட களம்!





பாராண்ட பாண்டவர்கள்
போர் புரிந்த கதை சொல்ல
பாரினிலே பத்தினிக்கோர் இடந்தேடி
ஆழியாம் நங்கை தன்னில்
அலையென எழுந்து வந்த
அறமுனி தாதனும் கவுத்தனும்
அலைபாய்ந்து எழில் கொஞ்சும்
இவ் ஊர் வதனத்தில் நிழலாடும்
இறவாத வரம் பெற்ற ஆல் சோலை
இதமாகக் கண்ணுற்றே கால்பதித்தான்

கண்ணுற்ற தாதனுக்கு இங்கே
கவியுறும் பூஞ்சோலை வளம்
காராடும் முகிற் கூட்டம் - எங்கும்
பார் பாடும் பாவலர்கள்
ஏரோடி விளையாடி எருதுகள்
போராடும் திறன் கண்டு புருவம் விரித்தான்

விரித்த புருவம் உயர்த்தியங்கே
விழுதாக அத்தியும் விருட்சமும் கண்டு
விறைத்துடல் சிலிர்த்து
வினைப்பயன் பெற்றாள் பத்தினியும்
விறைத்த புருவப் பாண்டவரும்
எனத் துள்ளி புவியதில் நின்றான் புதுமுனி

கிளையோடு நிழல் கொண்ட
மரக்கிளை கொண்டு கூடமைத்து
அத்தி மரத்தடியில் அவள் சிலை பதித்து
பொத்திய வதனம் திறந்து
பாண்டவர் ஐவரை அவள் பக்கம் இருத்தி
மத்தியூர் ''பாண்டுறுப்பு முனை" எனப் பூரித்தான்.

பாண்டியூர் கார்வேலு மனோகரன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதத்தைச் சொல்லுகின்றார் !



பாரதத்தின் ஒரு பகுதி
பகைமையினால் துண்டாகி
காடாள வேண்டும் எனும் கட்டளையால்,
காடேறி,
காட்டுக்குள் போனவர்கள்
பாரதம்தான் இன்னும்
பாண்டிருப்பில் படிக்கின்றார்கள்!
காவடிகள் தோள் நிறையும்
காண்பவர்கள் ஊர் நிறையும்
தாவணியும் நிறையும்
தலைநிறைந்த தீச்சட்டிகளின் எண்களினால்!
வாய் அலகும் வந்து போகும்
மௌனமான கால் நடையில்,
ஊர் நிறைந்து அம்மனுக்கு
ஒன்றாகப் பாடிவரும்!
அம்மாளின் அருள் நிறைவால்
அக்கினியும் குளிந்து போகும்
அடியவர்கள் தீக்குளிக்க
அமைதியாக நெருப்பிக்கும்
பார்ப்பவர்கள் மெய்மறக்கும்
பக்திகொண்ட தெய்வமகள்
பாண்டிருப்பில் வந்து தங்கி
பாரத்தை சொல்லுகின்றார்கள் !



நற்பிட்டிமுனை - எஸ். சிவகுருநாதன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரௌபதையம்மன் அகவல்!





அரிஓம் நமோ பகவதி ஓம்பராசக்தி
அக்கினியில் அனலை அடக்கி
ஓம குண்டலத்தில் உதித்த வீரசக்தி
பாஞ்சாலன் தனக்கு பண்புறு பிள்ளையாய் அன்றவதரித்து
அருச்சுனனை மாலையிட்டு குந்தம்மா தேவியின்
குலமருமகளாய்
ஐவர்தம்முடன் அன்புடன் இணைந்து
ஐந்து புதல்வரை அன்புடன் பெற்று
மண்ணதையாண்டு மகிழ்வுடன் இருந்தீர்
வஞ்சகன் துரியன் நாடது கவர
வஞ்சக சூது வலிபெற ஆடி
ஐவரும் தோற்று அகமெலிந்திருக்க
உம்மை இழுத்து உரிந்தனர் துகிலை
கண்ணனை நீரும் கருதியழைக்க
மாயனருளால் மாளாத்துகிலாய்
கூடியேவளரக் குவிந்தது துகிலும்
வெஞ்சினம் கொண்டு வீமன் கதையை
தாவியெடுக்க தனஞ்சயனப்போ
வில்லதை எடுத்தார் விண்மண்ணதிர
தருமருதனை தயவாய் தடுக்க
தாயே நீரும் கூறிய சபதம்
தாவியே இழுத்த தன்னெடு கூந்தலை
கண்ணிலான் தலைமகன் தன்னுடன் துணைவரும்
களத்தில் வீழ்தபின் கடந்தலை முடிப்பேன்
என்றுமே கூற எழில் பெறுவீமன்
துரியோதனனொடு துணைவர் தம்மையும்
கொல்லும்வரையில் குணமாய் நீரை
அள்ளியே அருந்தே னென்ன
காண்டீபன் தானும் கன்னனைக் கொல்வேன்
என்றே கூறி செய்தார் சபதம்
சபையில் இருந்தோர் தம்மனம் கலங்கி
கதறினர் அங்கே கண்ணிலான் தானும்
ஐவரை அழைத்து அன்பாயவனும்
இழந்த நாட்டை ஏற்பீர் என்றே
துரியோதனன் சகுனி துணைவரும் கூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுத்தே உரைக்க மண்ணதை மீட்க
ஆடினீர் சூது ஆயன் அருளால்
சூதினை வென்றீர் துணைவரைக் காத்தீர்
பன்னிரெண்டு பாங்காய் வனத்தில்
ஏங்கியே வாழ்ந்து வருடமதொன்று
மறைவாய் இருந்தே வந்தால்
ஈகுவேன் நாடு என்றுமே சொல்ல
ஏகனீர் வனத்திலங்கு - மாங்கனி
தன்னை மன்னவன் தன்னிடம்
விரும்பியே கேட்க விசயன் தானும்
குதித்துமே சரத்தால்
தானேயறுக்க உத்தமர் தருமர்
கனியின் உயர்வையறிந்து துயருற
மாயவன் தோன்றியங்கு உங்கள் எண்ணமரையென
உரைத்த போது மாங்கனிதானும்
மரத்தில் பொருந்த நன்றென மாலும்
தன்னகரேகினர் மலரின் மணத்தை
மாதா நீயறிந்து வீமன் தன்னிடம் - நீரும்
விரும்பியே கேட்க தருகிறேன்.
என்றவர் தானே நடந்தான்
அனுமனைக்கண்டு அவன் சுயரூபம்
கண்டு கண்டு மகிழந்து கனவுறவாடி
மலரின் தன்மையை மன்னனுக்குரைக்க
சென்றான் வீமன் போரது புரிய
எதிரியுமங்கு புறமுதுகாட்ட
தருமர் நடந்து தானே யிங்கு
குபேரனைக் கண்டு குற்றம் பொறுமென
அங்கவன் தானும் அகமிக மகிழ்ந்து
மலரினை ஈந்தான் மகிழ்வுடன் பொறீர்
மறைந்தே எள மன்னவன் வீராடன்
தன்னகரேகி தாதி நீராக்கி
வண்ணமகளாய் மலர் கொய்யும் நேரம்
மன்னவன் கீசகன் மயங்கியே உன்னை
பெண்ணாய் அணைய பிரியம் கொண்டு
கேட்கவேயவன்தன் கீழ்த்தரமான
சொல்லைக் கோட்டு சீறியெழுந்து
பலாயன் தன்னிடம் பரிவுடன் சென்று
விபரம் தன்னை விரிவாய்க்கூற
வீமன்கேட்டு விரைந்தே எழுந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருமிருளதனிலவன் கையது பற்றி
கழுத்தை திருகி வனத்தில் எறிந்தே
விராடனின் ஆ நிரை துரியன் கவர
பசு நிரையதனை பரிவுடன் மீட்க
உத்தரன் தன்னொடு உதவியாய் பேடியை
அனுப்பவே பேடிதன்னுரு பிரியச் செய்து
பசு நிரைமிட்டு வரும்வரை விராடன்
பகடைகண்ணாட கங்பட்டருடன்
கருத்தினானவனும் வெற்றிமுரசு வெகுவாய் ஒலிக்க
வென்றது உத்தரன் என்றான் விராடன்
கங்கருமப்போ கவனமாக வென்றதுவோடி
என்றுரைப்போ விராடன் தானும்
விரைந்தே எறிந்த பகடையும் தெறிக்க
சிந்திய ரெத்தம் நிலத்தில் விழாமல்
பரிவுடன் தடுத்தாய் பத்தினித்தாயே
மாயனைத்தூது மகிழ்வுடன் அனுப்பி
நாடது கேட்க துரியனும் மறுக்க
நூற்றுவர் ஐவர் தாக்கியே போர்புரைய
வீமன் கையால் துரியனும் அவன்தன்
துணைவரும் வீழ்ந்தபின் கூந்தல் முடிந்த கோதையே
சரணம் நவகோண நாகியே
பத்தினித்தாயே பாவாய் சரணம்
அடியார் செய்த அரும்பிழை தன்னை
குற்றம் பொறுப்பாய் குணமாய் தாயே
நாடது செழிக்க நன்மழை பெய்ய
நீதியாய் மன்னர் நெறியுடன் வாழ
உன்னருள் தந்து காத்தே அருள்வாய்
உன்கழல் சரணம், உன் தாளினை நமஸ்தே

ஆக்கம் : அமரர் சபாபதி கணபதிப்பிள்ளை
(முன்னாள் திரௌபதி அம்மன் ஆலய பூசகர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

22.08.2008 அன்று இறைபதமடைந்த திரௌபதையம்மன் ஆலய முன்னாள் பூசகர் கணபதிப்பிள்ளை பூசகரின் 31ம் நாள் நினைவு மலரில் கண்டது

## மகாபாரத மரபுகளை எமக்களித்துச் சென்ற மகான்

ஈழத்திருநாட்டில் இந்துக்களிடையே விழித்துப் பார்க்கவேண்டிய பிரதான மரபுகள் இரண்டு எனக்கூறலாம். அவையாவன :

1. மகாபாரத மரபுகள்
2. கண்ணகை மரபுக்கள் என்பனவாகும்.

கரவாகுப்பற்றில் அமைந்துள்ள புனித பூமியாலம் பாண்டிருப்பில் தொன்று தொட்டு வாழ்ந்து வரும் மக்களிடையே நிலை பெற்றுள்ள மரபுக்கள் மகாபாரத மரபுக்களாகும். இம்மக்கள் ஆதியும் அந்தமும் இல்லாத பரம் பொருளாகிய இறைசக்தியை சிவன், உமை, காளி, பிள்ளையார், முருகன் என்றவாறெல்லாம் போற்றி வழிபட்டு வருகின்ற போதும் திரௌபதை என்ற பத்தினித் தெய்வத்தை பயபக்தியோடு வழிபட்டு வருவது இப்பகுதி மக்களிடம் காணப்படும் ஒரு விசேட பண்பாகும். இந்தப் பத்தினித் தெய்வ வழிபாட்டுக்கு நிலைக்களனாக விளங்குவது அங்குள்ள திரௌபதை அம்மன் ஆலயமாகும். இவ்வாலயத்தின் மூலமாக மகாபாரத மரபுக்கள் எனக்கருதப்படும்.

1. தர்மன், வீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் என்ற பாண்டவர்கள் குலமரபுரிமையின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு வருகின்றது.
2. ஆலயத்தில் 18 நாட்கள் பாண்டவர்கள் கட்டுக்கு நின்று திரௌபதியை வழிபாடு செய்வர்.
3. ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தில் 18 நாட்களும் மகாபாரதக் கதை படித்து பயன்சொல்லப்படும்.
4. ஊரில் பூசகர் தத்தி, அருச்சுனர் தத்தி, வீமர் தத்தி, கட்டுக்கு நிற்கும் அடியார்கள் முதலான பாகுபாடுகள் மகாபாரத மரபினை அடியொற்றி வகுக்கப்பட்டு வந்தனர்.
5. வீமர் வீதி, அருச்சுனர் வீதி, வாள் மாத்தும் சந்தி, கல்யாணக் கால்வெட்டுமிடம் முதலான இடப்பெயர்கள் யாவும் மகாபாரத மரபினை ஒட்டியே பேசப்பட்டன.
6. உற்சவகாலங்களில் வனவாசம் செல்லல், தவநிலை ஏறல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்று பாண்டவர்களின் தீமிதிப்புடன் உற்சவம் முற்றுப் பெறும். மேற்படி மகாபாரத மரபுகளில் பாண்டிருப்பு வாழ் மக்கள் பங்கு கொண்டு சிறப்பித்து சிறந்தொரு இயல்பாகும். புராதன காலத்தில் இருந்து பாண்டிருப்பு மக்களுக்கு தர்ம நெறிமுறைப்படி வாழ்க்கை வாழ்வதற்கு வித்திட்ட தபசி தாதன் ஆவான். இவன் இப்பகுதியில் திரௌபதை அம்மன் ஆலயத்தை அமைத்து அவ்வாலயத்தில் திருவுருச் சிலைகளையும் பூசைக்குரிய உபகரணங்கள், சின்னங்களையும் உள்ளடக்கிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெட்டகம் ஒன்றை வீரச்சோலை வேளாளர் குலத்தில் பிறந்த குல மரபுத் தலைவன் ஒருவனிடம் ஒப்படைத்து ஆலுயத்தின் நித்திய நைமித்திய பூசைகளை நிறைவேற்றி அத்தலத்தைப் பராமரிக்கும் பொறுப்பினையும் வழங்கினான். அவ்வாறு வழங்கப்பட்ட குலத்தில் வரும் பெண் வழியில் வரும் ஒரு ஆண்மகனிடம் இப்பொறுப்பு உரிமை தொடர்ந்து வழங்கப்பட்டு வருவது ஒரு மரபாகும். அதனை அடியொற்றி அம்மன் ஆலயத்தில் தன்சொந்த மைத்துனனுடன் ஆலயப் பணி செய்யப் புறப்பட்டவரே சபாபதி கணபதிப்பிள்ளை அவர்களாவார். இவர் இளமையில் பாடசாலைக் கல்வியை 5ம் வகுப்பு வரை கற்றபோதும் விநாயகரின் அருளால் மாங்கனியைப் பெற்று ஞானத்தைப் பெற்றார். அதன் பயனாக அவர் மகாபாரத்தை செவிவழியாகவும் நூல்கள் மூலமாகவும் கற்று நல்ல பாண்டித்தியம் பெற்றிருந்தார். பலநூறு பாடல்களையும் அவற்றிற்கான பொருள்களையும் ஐயம்திரிபற கற்ற அவர் மகாபாரதத்தில் வாசம் புரிபவராகவும் விளங்கினார். இவர் எம்மிடையே பழகும் காலங்களில் மகாபாரத மரபுக்களைப் போதிக்கும் ஆசானாகவும் வாழ்க்கையில் தர்மநெறிப் படி வாழ வேண்டும் என்பதையும் வலியுறுத்தி வருவார். மகாபாரத மரபுக்களில் தீராத காதல் கொண்ட இவர் சிலகாலம் ஆலயப் பணியை செய்த காலங்களிலும் அப்பணியை துறந்துள்ள பின்னரும் ஊரவர்களுடனும் உறவினர்கள் மற்றும் பிற இடங்களில் சென்று நண்பர்களுடன் உறவாடும் போதும்,

- வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு பாரதத்தினடிப்படையில் தீர்வு காணக் கூறுவதும்.
- தனிமனித வாழ்க்கை தர்மநெறிப்படி அமைதல் வேண்டும்.
- அரசியல் தர்மம் பேணப்படுதல், பொருளாதாரத்தை சேர்ப்பதில் தர்மநெறி முறை இருக்க வேண்டும்.
- பொறுமையின் மேன்மை

முதலான மரபுகளை வலியுறுத்தி வந்தார். அவர் எதைப்பற்றிப் பேசினாலும் மகாபாரதக் கதைகளில் அதற்குரிய தர்மத்தை சுட்டிக்காட்டி அதன் மரபினை பறைசாற்றி வந்தார். அன்னார் மரணிக்கும் முன் மூன்றாம் நாள், நான் அவருடன் பேசும் போது ''நான் எவ்வளவோ கூற நினைக்கின்றேன் கூற முடியவில்லை'' எனக் கூறியவாறு, ''நான் கொண்டு வந்தனை நானே சுமக்க வேண்டும்'' என சுருக்கமாகக் கூறினார். இதுவும் மகாபாரத மரபினை ஒட்டியதே பாரதப் பழித்தல் ஆகாது'' என அருச்சுனனுக்கு கூறியதற்கு இது ஒப்பாகும். எனவே அமரராகிய எனது பெரியப்பா அவர்கள் தான் வாழ்ந்த சூழலில் மகாபாரத மரபுகளை பரப்புவதற்காக கன்மவினை கொண்டு பிறப்பெடுத்து செயலாற்றிய மகான் என்று நான் கருதுகின்றேன்.

ஆக்கம் : K. சத்தியசேகர் B.A., Dip.in.Ed.
அக் கோமாரி M.M.T.M.S ஆசிரியர்
தம்பிலுவில்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கலியாணக் கால்



பாண்டிருப்பு

திரௌபதையம்மன் ஆலயத்தில்

ஆண்டுதோறும் இடம்பெறும்

பாண்டவர் வரலாற்றை பாங்குடனே சித்தரிக்கும்

பாரதக் கதை (புராணம்) - இது

பதினெட்டு நாட்களில்

இடம்பெறும்

பக்திமிக்க

திருவிழாச் சடங்கு - இதில்

பதினொராம் நாள்

நிகழ்வில்

கலியாணக்கால்

வெட்டும்

கலகலப்பான திருவிழா ......

கால் வெட்டும்

இடமதுவோ

பாண்டியூரும் மருதூர் முனையும்

சங்கமிக்கும் ஒரு

பொதுச் சந்தியது

அலங்காரத் தோரணமாய்

ஆர்ப்பாட்ட ஊர்வலமாய்

பட்டாசு வெடி கொளுத்தி

பறை மேளம் தான் முழங்கி

நாதஸ்வர மேளங்களும்

தார தப்பட்டைகளும்

தான் முழங்க

வீதி முழுவதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிச்ச நிலா
வந்தது போல்
அலங்கார மின்விளக்குகள்
அவ்வழியே அலங்கரிக்க
அரகர கோசங்கள்
ஆட்டங்கள் பாட்டுக்கள்
ஒலிபெருக்கி கீதங்கள்
இத்தனை எழிலோடு
பாண்டியூர்
மருதூர் சந்தியிலே
நட்டப்பட்டிருக்கும்
பூவரச மரக்கம்பை - வீமன்
வெட்டிக் கொண்டு வரும்
காட்சி இதனை
வியந்து நின்று பார்ப்பதற்கு
முக்காடு இட்ட எம்
முஸ்லிம் சகோதர
சகோதரிகளும் வேடிக்கையோடு
வியந்து நிற்கும்
நிகழ்வு இது - இந்த
களிப்பூட்டும்
கலியாணக் கால்
இனங்களுக்குள்
இணைப்பூட்டும் ஒரு
இனிய நிகழ்வாகுமே !

பாண்டியூர் - பொன் நவநீதன் (நேரு)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னை திரௌபதி




கொக்கட்டி மரத்தடியில் குடியிருந்தவள் - இன்று
கோவில் கண்டு எழிலோடு கொலுவிருப்பவள்
திக்கெட்டும் புகழ் வீசி வாழுகின்றவள் - தன்னை
தேடிவரும் பக்தர்களைக் காக்கின்றவள்

பாண்டவரின் பத்தினியாய் பவனி வந்தவள் - எங்கள்
பாண்டியூரைக் காத்து அருள் பாலிப்பவள்
வேண்டி நின்ற தாதனுடன் இங்கு வந்தவள் - மக்கள்
வேதனையைத் தீர்க்கின்ற தாயானவள்

மாதவனாம் கண்ணனுக்கு தங்கையானவள் - நல்ல
மருமகளாய் குந்தியுடன் வாழ்ந்திருந்தவள்
பாதகர்கள் கூட்டத்தையே அழிக்கவந்தவள் - தன்
பகைமுடித்துக் கூந்தலையே முடித்துக் கொண்டவள்

வண்ண மகள் வடிவு கொண்டு மறைந்து வாழ்ந்தவள் - கொடிய
வனத்தினிலே ஐவருக்கும் துணையிருந்தவள்
கண்ணசைவில் கருணை மழை பொழிகின்றவள் - பல
காலங்களை வென்று இங்கு காட்சி தருபவள்

அற்புதங்கள் காட்டுகின்ற அன்னையானவள் - இந்த
அகிலமதை ஆட்டுவிக்கும் சக்தியானவள்
கற்பனையைக் கடந்த சோதி வடிவானவள் - தீக்
கனலிலே அவதரித்த கருணைத் தாயவள்


பாண்டிருப்பு கு. சுந்தரலிங்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீ திரௌபதை அம்பாள் அனுக்கிரகம்
அனைவருக்கும் கிடைக்கட்டும்

# அபிராமி நகையகம்

ஓடர் நகைகள் குறித்த
தவணையில்
உத்தரவாதத்துடன்
தரமான 22 கரட் தங்கத்தில்
செய்து தரப்படும்





ஆஸ்பத்திரி வீதி, களுவாஞ்சிகுடி.
Hospital Road, Kaluwanchikudy

---

இச்சஞ்சிகை அர்ச்சனா பப்ளிகேஷன் சார்பில் ஆக்கியும் தொகுத்தும்
சிவஸ்ரீ க.ஐ. யோகாராசா குருக்கள் அவர்களினால் 2008-10-15ம் திகதி
மருதமுனை எபெக்ஸ் அச்சகத்தில் (0776055268) அச்சிட்டு
வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org